



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 248 02.03.2026 MONDAY MAASI : 18 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 248 02.03.2026 திங்கள்கிழமை மாசி : 18 விலை : ரூ.5/–


## தமிழக ரயில் திட்டங்களுக்கான நிதி

# "9 மடங்கு அதிகரிப்பு!"

## பிரதமர் நரேந்திர மோடி பேச்சு

மதுரை : மார்ச்.2


"தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை ரூ.880 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 2026 27 ஆண்டில் ரூ.7600 கோடியாக உயர்ந்தது" என பிரதமர் மோடி பேசினார்.

தமிழகத்தில் ரூ.4,400 கோடி மதிப்புள்ள மரக்காணம் புதுச்சேரி நான்கு வழிச்சாலை, பரமக்குடி ராமநாதபுரம் பிரிவு நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, பொம்மிடி, காரைக்குடி, மணப்பாறை, மொரப்பூர், பொள்ளாச்சி, சோழவந்தான், ஸ்ரீவில்லித்புத்தூர் மற்றும் திருவாரூர் அம்ரித் ரயில் நிலையங்கள் திறப்பு மற்றும் சென்னை கடற்கரை சென்னை எழும்பூர் 4வது ரயில் வழித்திட்டம் நாட்டுக்கு அர்பணிக்கும் விழாக்கள் மதுரை விமான நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்றன.

இத்திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "புனிதமான மதுரை மாநகருக்கு வருவதை பெரும் கவுரவமாக உணர்கிறேன். மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வருக்கும் தலை வணங்குகிறேன். இந்த விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானது. இன்று ரூ.4,500 கோடிக்கு மேல் மதிப்புள்ள திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும், விவசாயிகள், சுற்றுலா பயணிகள், புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு அதிக பயனளிக்கும். இதுபோன்ற உயர்தர கட்டமைப்புகளை உருவாக்குவது மக்களுக்கு அதிகார பங்களிப்பை அளிப்பதாகும்.

கடந்த 12 ஆண்டுகளாக தமிழக நெடுஞ்சாலை வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகத்தில் 2014 முதுல் 4,000 கிலோ மீட்டர் தூரத்துக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று இரண்டு பெரிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மரக்காணம் புதுச்சேரி நான்கு



வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.2,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் தமிழ்நாடு புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் சுற்றுலா, வர்த்தகம், பொருளாதாரம் பலமாகும். பரமக்குடி ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையால் ராமேஸ்வரம் தனுஷ்கோடி பகுதி முன்னேறும். ராமேஸ்வரத்துக்கு புனித பயணம் மேற்கொள்பவர்கள், வேளாண் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகள், கடல்சார் பொருட்களின் போக்குவரத்தையும் மேம்படுத்தும்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்திய ரயில்வேத்துறை பெரும் மாற்றம் கண்டுள்ளது. ரயில் போக்குவரத்து, நவீன திறன் மிகுந்த மக்கள் சார்ந்த போக்குவரத்தாக மாறியுள்ளது. இந்த மாற்றம் தமிழகத்தில் நன்கு தெரிகிறது. தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை நிதி ஒதுக்கீடு ரூ.880 கோடியாக இருந்தது. 2026 2027 நிதியாண்டில் இது ரூ.7600 கோடியாக உயர்ந்தது.

தமிழ்நாட்டில் 1300 கிலோ மீட்டருக்கு அதிகமாக புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 97 சதவீத மின்மயமாக்கல் பணிகள் முடிந்துள்ளன. நூற்றுக்கணக்கான மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் பாலம் திறக்கப்பட்டது. இது இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலமாகும். இது நமது பொறியியல் திறனின் அடையாளமாகும். இப்பாலம் சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்த்து வருகிறது.

தமிழகத்தில் தற்போது 9 வந்தே பாரத், 9 அம்ரித் பாரத் ரயில்கள் சேவையாற்றி வருகின்றன. இந்த ரயில்களின் பெட்டிகள் சென்னையில் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெற்று வருகின்றனர். அம்ரித் திட்டத்தில் 77 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ரயில் நிலையங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கும்பகோணம், ஏற்காடு, வேலூர் ஆகாசவாணி புதிய பண்பலை அஞ்சல் நிலையங்கள் மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தமிழக உள்கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடுகையில் 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அந்த பட்ஜெட்டில் சென்னை பெங்களூர், சென்னை ஹைதராபாத் புல்லட் ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் இப்பகுதிகளின் பொருளாதாரத்தை முழுமையாக மேம்படுத்தும்.

தமிழ்நாடு வளமான வரலாறு மற்றும் மரபுக்கு சொந்தமான மாநிலம். ஆதிச்சநல்லூர் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உலகளவில் வரலாற்று சிறப்பு மிக்க இடமாக மாற்றப்படும். புலிகாட் ஏரி, பொதிகை மலைப்பகுதி ஆகியவற்றில் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். இதனால் வேலைவாய்ப்புகள் பெருகும். அதே நேரத்தில் இயற்கை வளம் பாதுகாக்கப்படும்.

நாடு முழுவதும் 200 தொழில்துறை தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்கு தயாரிப்புகள் ஊக்கப்படுத்தப்படும். இதில் தமிழ்நாட்டிலும் பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. இதனால் தமிழக இளைஞர்கள் பலனடைவர்.

2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வில் ஒவ்வொரு இந்தியரும் உள்ளனர். நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றும். நம் அனைவரின் மொத்த இலக்கும் வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வளர்ச்சிடைந்த தமிழகத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய மாநிலத்தின் முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

முன்னதாக மத்திய அமைச்சர் எல்.முருகன் பேசுகையில், "பிரதமர் மோடி தமிழக மக்கள், தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தின் மீது அதிக பற்று வைத்துள்ளார். இதனால் தான் உலகம் முழுவதும் திருக்குறள் கலாச்சார மையம் திறந்து வருகிறார். திருக்குறளை 35க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்த்துள்ளார். இதுவரை தமிழகத்துக்கு ரூ.12 லட்சம் கோடி நிதி வழங்கியுள்ளார். பிரதமர் மோடி தமிழகம் வரும் போதெல்லாம் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்து வருகிறார். இன்று ரூ.4,500 கோடி நலத்திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார்" என தெரிவித்தார்.

தமிழக ஆளுனர் ஆர்.என். ரவி, தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வா.வேலு, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பெரியார், அண்ணா, கருணாநிதி காட்டிய பாதையில் பயணித்து வெல்வோம் ஒன்றாக: ஸ்டாலின் சூளுரை

சென்னை: மார்ச்.2-

பெரியார், அண்ணா, கருணாநிதி நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக! என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தனது 73வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "தமிழும் தமிழ் நாடும் நம் உயிர்! அவற்றைக் காப்பது நம் கடமை!.

உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73ம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ் நாள் கடமை எனச் செயலாற்றி வருகிறேன். தமிழும் தமிழ் நாடும் தலை நிமிர்ந்த வரலாற்றில் நான் சிறு தொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன்.

அந்த உறுதியோடு தான், "Dravidian Model-ல் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன். கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய்ச் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனைகளும்!

தனிக்குணம் கொண்ட தமிழர் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்; நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது! நம் தமிழினத்தின் லட்சியப் பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக் கூடாது; நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது! சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத்திறத்தால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன்.

இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி! பெரியார் அண்ணா கருணாநிதி ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக!" என்று தெரிவித்துள்ளார்.



## முதல்வர் ஸ்டாலின் பிறந்தநாள் திரைப்பிரபலங்கள் பங்கேற்புடன் கோலாகலமாகக் கொண்டாடிய ராகவி சினி ஆர்ட்ஸ்

சென்னை, மார்ச்.02-

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ராகவி சினி ஆர்ட்ஸ் மற்றும் நீலாவதி டிரஸ்ட் சார்பாகச் சென்னையில் பிரம்மாண்டமான பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

தலைமை மற்றும் சிறப்பம்சங்கள்:

திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினருமான சமூக சேவகர் 'சேவா ரத்னா' டாக்டர் ஜெ. விக்டர் தலைமையில் இந்த விழா மிக விமரிசையாக நடைபெற்றது. விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இனிப்புகள் மற்றும் தேநீர் வழங்கப்பட்டு மகிழ்ச்சி பரிமாறப்பட்டது. விழாவில் கௌரவ ஆலோசகர் எஸ்.டி.சுப்பிரமணியன், நடிகர் மீசை மனோகரன், நடிகர் அப்பா பாலாஜி, ஒளிப்பதிவாளரும், நடிகருமான பிரேம்ஜி, எழுத்தாளர் விவேக் ராஜ், தலைவர் மீனா, ப்ரியா, மேக்கப் ஆர்ட்டிஸ்டும் நடிகையுமான அங்கிதா, வழக்கறிஞர் சோனு (எ) ப்ரியதர்ஷினி, குழந்தை நட்சத்திரம் லியானா மற்றும் நடிகர்கள், நடிகைகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்புகள், தேநீர் வழங்கப்பட்டது. ஏழை, எளியவர்களுக்கு 105 நபர்களுக்கு உணவு, வாட்டர் பாட்டில் வழங்கப்பட்டது.



■ திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குற்பட்ட அருள்மிகு திருமூர்த்தி மலை அமணலிங் கேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களுக்கு தினசரி 50 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வந்தது. இதை நாள் தோறும் 150 நபர்களுக்கு உயர்த்திய தமிழக முதல்வர் ஆணையை முன்னிட்டு, பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே. ஈஸ்வரசாமி, திருமூர்த்தி மலை கோவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இணை ஆணையாளர் ரத்தினவேல் பாண்டியன், செயல் அலுவலர் அமர நாதன், கோவில் அறங்காவலர் குழு தலைவர் ரவி, அறங்காவலர்கள் மற்றும் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பாபு, உடுமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செழியன், பேரூர் கழக செயலாளர் உதயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கோவில் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## கரிசல்பட்டி இளைஞர்களுக்கு ஜாக்பாட் வேலைவாய்ப்பு வழங்கத் தொழிற்சாலைகள் கொண்டு வரப்படும் அமைச்சர் உறுதி

சின்னாளபட்டி, மார்ச்.2-

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் முடிவுற்ற நலத்திட்டப் பணிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இன்று தீவிரமாகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு திறந்து வைத்தார்.

புதிய கட்டிடங்கள் திறப்பு:

கரிசல்பட்டி ஊராட்சியில் ரூ.34.23 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு புதிய வகுப்பறைகள், புதிய அங்கன்வாடி மையம் மற்றும் புதிய நியாயவிலைக்கடை ஆகியவற்றை அமைச்சர் திறந்து வைத்தார்.



நிகழ்ச்சியில் பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி: "கரிசல்பட்டி, கோனூர், அனுமந்தராயன்கோட்டை போன்ற பகுதிகளில் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர். இப்பகுதியைச் சேர்ந்த படித்த இளைஞர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் விரைவில் தொழிற்சாலைகள் கொண்டு வரப்படும். இதன் மூலம் இந்த ஊராட்சி நகரத்திற்கு இணையான வளர்ச்சியைப் பெறும்."

கல்வி மற்றும் மருத்துவ வசதிகள்:

மாணவர்கள் உயர் கல்வி கற்க ஏதுவாக ரெட்டியார்சத்திரம் மற்றும் கிழக்கே உள்ள அரசு கலைக்கல்லூரிகளுக்குச் சென்று வரப் பேருந்து வசதிகள் செய்து தரப்படும் என்றார். மேலும், இப்பகுதியில் உயரிய சிகிச்சை அளிக்க மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கிராமப்புற வீரர்களை ஊக்குவிக்க சிறந்த விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் வி.மூ.திருமலை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஸ்ரீஇராகவ்பாலாஜி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, இன்பராஜ், சரக துணைப் பதிவாளர் கௌதம் கார்த்திக், கூட்டுறவு சார் பதிவாளர்கள் அறிவழகன், அன்பரசு, அம்பிகேஸ்வரன், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர், வட்டார வளர்ச்சி அலுவலர்; மலரவன், ஒன்றிய பொறியாளர் இராமநாதன், கரிசல்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் பால்ராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜஸ்டின் மிக்கேலம்மாள், சுப்புலெட்சுமி; வள்ளுவதாஸ், ஆசிரியர் அமலஇளவரசு, கிளைச் செயலாளர் ஜஸ்டீன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



# சென்னை அண்ணா சாலையில் ரூ.3.46 கோடியில் பூங்கா உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, மார்ச்.02–

சென்னையில் ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப் பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், “துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிப்.28 அன்று சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ராமா தெரு சென்னை நடுநிலைப் பள்ளியில் 3.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தினைப் திறந்து வைத்து, கரும்பலகையில் அமைபபட்டுள்ள மின்னணு தொடு திரையை இயக்கி பார்வையிட்டார்.

மேலும், பள்ளியில் மாணவ, மாணவிகள் மகிழ்ச்சியுடன் கல்வி பயில ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதையும், கண் கவர் வண்ணங்கள் சுவர்களில் தீட்டப்பட்டுள்ளதையும், குழந்தைகளை கவரும் வகையில் மேஜை, டேபிள்கள் அமைக்கப்பட் டுள்ள தையும் பார்வையிட்டு மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடி கருத்துகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 113, நூர் வீராசாமி தெருவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பெண்கள் சுகாதார மையத்தினையும், வார்டு 112 பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையையும் திறந்து வைத்து, பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

மேலும் அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அமைந்தகரை சென்னை நடுநிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 4.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் பட்ட புதிய பள்ளிக் கட்டடத்தினைப் திறந்து வைத்தார். பின்னர் சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணா சாலையில் 3.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு சமூக நீதி பூங்காவினைப் துணை முதல்வர் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், டாக்டர் நா.எழிலன், துணை மேயர் மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமர குருபரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மார்ச் முதல் மே வரை வெப்ப அலை அதிகரிக்கும்: வானிலை ஆய்வு மையம்

சென்னை, மார்ச்.02–

தமிழக வட மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் மார்ச் முதல் மே மாதம் வரை வெப்ப அலை அதிகரிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மார்ச் முதல் மே மாதம் வரையிலான வெப்பநிலை மற்றும் மழை தொடர்பான வானிலை கணிப்பை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது: தென்கிழக்கு தீபகற்பத்தின் (வட தமிழகம், கடலோர தமிழகம்) பல பகுதிகளிலும், வடமேற்கு மற்றும் மேற்கு மத்திய இந்தியாவின் சில பகுதிகளிலும் மார்ச் முதல் மே 2026 வரையிலான காலகட்டத்தில் இயல்பை விட அதிகமான வெப்ப அலை நாட்கள் இருக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக அதிகபட்சமாக 15 நாட்கள் வரை வழக்கத்தை விட அதிகமான வெப்ப அலை நாட்கள் நிலவ வாய்ப்புள்ளது. எனவே இந்த காலகட்டத்தில் போதுமான நீரை அருந்த வேண்டும். அதிக வெயில் இருக்கும் நேரத்தில் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். வெப்ப அலையில் எளிதில் பாதிக்கப்படும் மக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அவர்களை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வாய்ப்பு குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: குமரிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. குமரிக்கடல் பகுதிகளிலிருந்து லட்சத்தீவு பகுதிகள் வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளையும் (மார்ச் 2), நாளை மறுதினமும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 4ம் தேதி தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 5, 6 தேதிகளில் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், 7ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்கள், தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பூந்தமல்லி வடபழனி இடையே சென்னை மெட்ரோ ரயில் சேவை தொடங்க அனுமதி

சென்னை, மார்ச்.02–

சென்னையில் 2ம் கட்டம் மெட்ரோ ரயில் திட்டம் 116.1 கி.மீ. தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப் படுகின்றன.

இதில், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி வரை 26.1 கி.மீ. தொலைவிலான வழித்தடத்தில் பூந்தமல்லி போரூர், போரூர் வடபழனி வரை பணிகள் நிறைவடைந்துள்ளன.

அதைத் தொடர்ந்து, பூந்தமல்லி போரூர் வரையிலான தடத்தில் மெட்ரோ ரயில் மற்றும் வழித்தடத்துக்கு பாதுகாப்பு சான்றிதழ் பெறுவதற்கான சோதனையை இந்திய ரயில்வே ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பின் குழுவினர் கடந்த ஆண்டு ஆக.16 முதல் ஒரு வாரத்துக்கு மேல் நடத்தினர்.

அதைத் தொடர்ந்து, ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம். சவுத்ரி தலைமையிலான குழுவினர், பூந்தமல்லி வடபழனி இடையே அதிவேக சோதனை ஓட்டத்தை கடந்த 24ம் தேதி மேற்கொண்டனர்.



அப்போது, மெட்ரோ ரயிலை மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் இயக்கி சோதித்தனர். மேலும், சிக்னல் அமைப்பு, பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்நிலையில், பூந்தமல்லி முதல் போரூர் வரை முழுமையாகவும். போரூர் முதல் வடபழனி வரை குறைவாகவும் மெட்ரோ ரயில் சேவை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி மெட்ரோ நிலையம் போரூர் சந்திப்பு வரையிலான 14.6 கி.மீ நீளமுள்ள வழித்தடம் பொது மக்களின் பயன்பாட்டுக்குத் திறக்க மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதில் 10 நிலையங்கள் உள்ளன.

ஆரம்பத்தில் பூந்தமல்லி புறவழிச் சாலை மற்றும் போரூர் சந்திப்பு இடையே 15 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்.

போரூர் சந்திப்பு முதல் வடபழனி வரை, ஒரு நேரத்தில் ஒவ்வொரு திசையிலும் ஒரு ரயில் மட்டுமே இயக்கப்படும். அதன் வேகம் மணிக்கு 25 கி.மீக்கும் குறைவாகவே இருக்கும். 20 நிமிடங்கள் இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும். ஒரு மாதத்துக்குப் பிறகு, ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்“ என்றனர்.

# 29 இடங்களைக் கேட்கும் காங்கிரஸ்... 23க்கு இழுக்கும் திமுக

சென்னை, மார்ச்.02–

திமுக உடனான அதிகாரபூர்வ தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையில் காங்கிரஸ் 29 தொகுதிகளைக் கேட்டதாகவும், திமுக தரப்பில் 23 தொகுதிகளை வழங்க முன்வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தையைத் தீவிரப்படுத்தியுள்ளது. முன்னதாக, ஆட்சியில் பங்கு மற்றும் கூடுதல் தொகுதிகள் கோரிக்கையை காங்கிரஸ் எழுப்பியதால் கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்பட்டது. இதனால் திமுக காங்கிரஸ் இடையே பேச்சுவார்த்தை நடக்குமா என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் இவ்விஷயத்தில் சோனியா நேரடியாக தலையிட்டதால் காங்கிரஸை நேற்று பேச்சுவார்த்தைக்கு அழைத்தது திமுக. அதன்படி, நேற்று காலை 11 மணி அளவில் தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் காங்கிரஸ் பேச்சுவார்த்தைக் குழு அறிவாலயம் வந்தது. திமுக பொருளாளர் டி.ஆர். பாலு தலைமையிலான குழுவுடன் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், காங்கிரஸ் தனது முந்தைய பிடிவாதத்தில் இருந்து சற்றே இறங்கி வந்ததாகத் தெரிகிறது.

இதுகுறித்து திமுக, காங்கிரஸ் வட்டாரங்களில் விசாரித்த போது, “பேச்சுவார்த்தையின் போது கிரிஷ் சோடங்கர், ‘காங்கிரஸுக்கு தமிழகம் முழுவதும் வாக்கு வங்கி இருக்கிறது. புதிதாக கூட்டணிக்கு கட்சிகள் வந்துள்ளதால் பழைய கட்சிகளின் எண்ணிக்கையை குறைக்கப் போவதாக உங்கள் தலைவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து எங்கள் மேலிடம் ஆலோசித்து, 29 சட்டப்பேரவைத் தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை இடம் கேட்கும்படி தெரிவித்துள்ளது’ என இறங்கி வந்தார்.

அதற்குப் பதிலளித்த டி.ஆர்.பாலு, ‘நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது. 23 தொகுதிகள், ஒரு மக்களவை இடம் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் கணிசமான இடங்களைத் தருகிறோம். அதேபோல், மாநிலங்களவை பதவிக்கான வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் மார்ச் 5ம் தேதியாகும். எனவே, தாமதிக்காமல் மார்ச் 3ம் தேதிக்குள் காங்கிரஸ் சார்பில் வேட்பாளர் யார் என்பதைச் சொல்லிவிடுங்கள். கூடுமானவரை தமிழகத்தில் இருந்து ஒருவரை தேர்வு செய்ய வேண்டும்’ எனத் தெரிவித்தார். அதற்கு காங்கிரஸ் குழுவினர், ‘எங்கள் கட்சி மேலிடத்துடன் ஆலோசித்து விட்டுச் சொல்கிறோம்‘ எனக் கூறிவிட்டுச் சென்றனர்’’ என்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியதாவது: திமுக காங்கிரஸ் இடையிலான பேச்சுவார்த்தை சுமுகமாகச் செல்கிறது. எங்களுக்கு தேவையானதைக் கேட்டுள்ளோம், அவர்களும் பரிசீலிப்பதாகக் கூறியுள்ளனர். ஒரு மாநிலங்களவை இடம் தருவதாக முதல்வர் உறுதியளித்துள்ளார். எங்கள் கூட்டணி கொள்கை ரீதியானது. இதைச் சிதைக்க யாரும் முயற்சிக்க வேண்டாம்.

தவெகவுடன் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துவதாக வெளியான தகவல் வெறும் வதந்தி. கிரிஷ் சோடங்கர் சொல்லாத கருத்தைச் சொன்னதாகக் கூறுவது கண்டிக்கத்தக்கது. எங்கள் மேலிடம் திமுகவுடன் கூட்டணி தொடரவே அறிவுறுத்தியுள்ளது. இன்னும் 2 நாட்களில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

ஆளுக்கு ஒண்ணு: இதேபோல், திமுக கூட்டணியில் உள்ள தமிழக வாழ்வுரிமைக் கட்சி, எஸ்டிபிஐ, மனிதநேய ஜனநாயகக் கட்சி, கொங்கு இளைஞர் பேரவை, முக்குலத்தோர் புலிப்படை ஆகிய 5 கட்சிகளின் பிரதிநிதிகளும் தொகுதி பங்கீட்டுக் குழுவை நேற்று சந்தித்துப் பேசினர். அவர்களிடம் உதயசூரியன் சின்னத்தில் தலா ஒரு தொகுதியில் போட்டியிட திமுக தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதில், தவாக மட்டும் 2 தொகுதிகள் கேட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

## ஈரான் போர்: இந்தியாவில் உள்ள வெளிநாட்டு பயணிகள் விசாவை நீட்டித்துக்கொள்ள அறிவுறுத்தல்

புது டெல்லி, மார்ச்.02–

ஈரான் மற்றும் மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் போர் பதற்றம் காரணமாக விமானங்கள் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, இந்தியாவிலுள்ள வெளிநாட்டினர் விசா நீட்டிப்புகளுக்கு தொடர்புடைய அதிகாரிகளை அணுகுமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஈரான் போர் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள பயண இடையூறுகளால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டினருக்கு வெளியுறவு அமைச்சகம் (விணிகி) முக்கிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து வெளியான அறிக்கையில், “மேற்கு ஆசிய பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக தங்கள் பயணத் திட்டங்களை மாற்ற வேண்டியிருக்கும் இந்தியாவில் உள்ள அனைத்து வெளிநாட்டினரும், தங்கள் விசா நீட்டிப்பு அல்லது தங்குதலை முறைப்படுத்த உதவி தேவைப்பட்டால், அருகிலுள்ள வெளிநாட்டினர் பிராந்திய பதிவு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவிகளை வழங்குவார்கள்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் ரத்து காரணமாக இந்தியாவில் எத்தனை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சிக்கித் தவிக்கின்றனர் என்பது உடனடியாகத் தெரியவில்லை. சனிக்கிழமை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரானைத் தாக்கிய பின்னர், மத்திய கிழக்கு முழுவதும் மற்றும் இந்தியா உட்பட பிற நாடுகளில் நூற்றுக்கணக்கான விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 1) மேலும் 22 சர்வதேச சேவைகளை ரத்து செய்துள்ளதாக ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. இதனால் மேற்கு ஆசிய நெருக்கடி காரணமாக இதுவரை ரத்து செய்யப்பட்ட வெளிநாட்டு விமானங்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்துள்ளது.

மத்திய கிழக்கில் வான்வெளி கட்டுப்பாடுகள் காரணமாக இந்திய விமான நிறுவனங்கள் மார்ச் 1 ஆம் தேதி 444 சர்வதேச விமானங்களை ரத்து செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.



## ரேஷனில் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை நிறுத்த மத்திய அரசு முடிவு

புதுடெல்லி, மார்ச்.02–

நீண்ட காலம் சேமித்து வைப்பதில் சிக்கல் ஏற்பட்டதால், செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, இரும்பு சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய நூண்ணூட்ட சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கும் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த 2021ம் ஆண்டு அறிவித்தார்.

விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசு கொள்முதல் செய்யும் அரிசிகள் உணவு தானிய சேமிப்பு கிடங்கில் 2 முதல் 3 ஆண்டுகள் வரை சேமித்து வைக்கப்படுகின்றன. நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் உணவு கிடங்குகளில் 674 லட்சம் டன்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 372 லட்சம் டன்கள் ஒவ்வொரு ஆண்டும் இலவச அரிசி திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

இந்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை எவ்வளவு காலம் சேமித்து வைக்க முடியும் என்ற ஆய்வில் காரக்பூர் ஐஐடி ஈடுபட்டது. நமது நாட்டின் தட்ப வெப்ப சூழ்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை நீண்ட காலம் சேமித்து வைத்தால் அது உடைந்து விடுகிறது. மேலும், அவற்றில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களின் அளவுகளும் குறைவது ஆய்வில் தெரிய வந்தது.

இதையடுத்து இப்பிரச்சினைகளுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வு காணும் வரை செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

# ஆதரவற்ற விதவையர் வருமான உச்சவரம்பு ரூ.8,000 ஆக உயர்த்தி அரசாணை வெளியீடு

சென்னை, மார்ச்.02–

தமிழகத்தில் ஆதரவற்ற விதவை சான்றிதழ் பெறுவதற்கான மாதாந்திர வருமான உச்சவரம்பை ரூ.4,000லிருந்து ரூ.8,000 ஆக உயர்த்தி, தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இது குறித்து, தமிழக அரசின் மனித வள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் சமய மூர்த்தி பிறப்பித்துள்ள அரசாணை: தமிழகத்தில் ஆதரவற்ற விதவை சான்றிதழ் பெறுவதற்கான மாதாந்திர வருமான உச்சவரம்பு கடந்த 1993ம் ஆண்டு ரூ.1,000 ஆக இருந்தது. பின்னர், 2006ம் ஆண்டில் இது ரூ.4,000 ஆக உயர்த்தப்பட்டது.



தற்போது நிலவும் விலைவாசி உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவுகளை கருத்தில் கொண்டு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த உச்சவரம்பை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, குடும்ப ஓய்வூதியம், தனிப்பட்ட தொழில் வருமானம் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களில் இருந்தும் வரும் மாத வருமானம் ரூ.8,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். கணவனை இழந்த பெண்கள் மட்டுமே இதில் அடங்குவர்.

வி வாகரத்து பெற்றவர்கள் ஆதரவற்ற விதவை பிரிவின் கீழ் வரமாட் டார்கள். அரசுப் பணிகளில் (பே லெவல் 10 வரை) பெண்களுக்கு ஒதுக்கப்படும் 30 சதவீத இட ஒதுக்கீட்டில், 10 சதவீத இடங்கள் ஆதாவற்ற விதவைகளுக்கென பிரத்யேக மாக ஒதுக்கப்படும்.

# “ஓபிஎஸ்ஸை சேர்க்காதது இபிஎஸ் எடுத்த சரியான முடிவு” கே.பி.ராமலிங்கம் சர்டிஃபிகேட்

சென்னை, மார்ச்.02–

ஓபிஎஸ்ஸை அதிமுகவில் சேர்க்காதது சரியான முடிவு என்பதை எடப்பாடி பழனிசாமி நிரூபித்து விட்டார். சிவாஜியை காட்டிலும் ஓ பன்னீர்செல்வம் மிகப்பெரிய நடிகர் என பாஜக மாநில துணைத்தலைவர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்தார்.



திருச்சியில் மார்ச் 11ம் தேதி நடைபெறும் பாஜக மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். இந்த மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் மாவட்ட பாஜக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற கட்சியின் மாநில துணைத் தலைவர் கே.பி.ராமலிங்கம் செய்தியாளர்களிடம் பேசியதாவது: திமுகவில் பாரம்பரிய நிர்வாகிகளை விட கட்சி மாறி வந்த நிர்வாகிகள் இப்போது அதிகமாக இருக்கிறார்கள்.

ராஜகண்ணப்பன், சேகர்பாபு, எ.வ.வேலு, முத்துசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், ஜெகத்ரட்சகன், டி. எம்.செல்வகணபதி, ரகுபதி உள்ளிட்டோர் அதற்கு உதாரணம். மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்கிற பயத்தில் தான் மாற்றுக் கட்சியினரை திமுக இணைத்துக் கொண்டிருக்கிறது. பெரும் விலை கொடுத்து கட்சிகளை கூட்டணியில் சேர்க்கிறது திமுக. இரட்டை இன்ஜின் ஆட்சி முறை தான் தமிழகத்திற்கு தேவை என மக்கள் முடிவெடுத்து விட்டனர். தேசிய தலைமையுடன் இணைந்து நடத்தும் ஆட்சி தான் தமிழகத்துக்கு நன்மை தருவதாக அமையும்.

வட மாநிலங்களில், மத்திய அரசு இயற்றும் சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் அரசுகள் இருப்பதால் அங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. முறையற்ற ஆட்சி தமிழகத்தில் நடப்பதால் மாநிலத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதற்கு சரியான தீர்வு அதிமுக ஆட்சி தமிழகத்தில் அமைய வேண்டும்.

கூட்டணி வலுவாக இருந்தால் மட்டும் போதாது, மக்கள் ஆதரவும் வேண்டும். கடந்த 1996ம் ஆண்டு அதிமுகவுடன் அனைத்துக் கட்சிகளும் கூட்டணியில் இருந்தன. எனினும் மக்கள் ஆதரவு இல்லாததால் அதிமுக தோல்வி அடைந்தது. அதுபோல் தற்போது திமுகவுக்கு எதிரான மன நிலையில் மக்கள் உள்ளனர். அதை அறுவடை செய்ய வேண்டும் என்பதால் தான் தவெக தலைவர் விஜய், தவெகவுக்கும் திமுகவுக்கும் தான் போட்டி எனக் கூறுகிறார்.

ஓபிஎஸ்ஸை அதிமுகவில் சேர்க்காதது சரியான முடிவு என்பதை எடப்பாடி பழனிசாமி நிரூபித்து விட்டார். திமுகவில் ஓபிஎஸ் இணைந்திருப்பதன் மூலம், அதிமுகவை இத்தனை ஆண்டு காலம் அழிக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. சிவாஜியை காட்டிலும் மிகப்பெரிய நடிகர் ஓபிஎஸ். திமுக மீது புகார்கள் எழும்போது அதை மடைமாற்றும் விதமாக அரசு செய்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

அதிமுக தலைமையிலான கூட்டணி பேச்சுவார் த்தைகள் மார்ச் 15ம் தேதிக்குள் முடிவுக்கு வரும். எங்களுக்கு எங்கெல்லாம் வெற்றி வாய்ப்பு இருக்கிறதோ அந்தத் தொகுதிகளை அதிமுகவிடம் கேட்போம். எங்களைப் பொறுத்தவரை திமுகவை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்பதுதான் இலக்கு. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா நிறைவு

ராமநாதபுரம், மார்ச்.02–

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நேற்று நிறைவடைந்தது. இங்கு நேற்று முன்தினம் மாலை கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. நெடுந்தீவு பங்குத் தந்தை பத்திநாதன்கொடியேற்றி வைத்தார். தொடர்ந்து, சிலுவைப் பாதை, திருப்பலி, தேர் பவனி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முக்கிய நிகழ்வாக நேற்று காலை கூட்டு திருப்பலி நடைபெற்றது. யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜோசப்தாஸ் ஜெபரத்தினம், நெடுந்தீவு பங்குத்தந்தை பத்திநாதன், ராமேசுவரம் வேர்கோடு பங்குத் தந்தை தாமஸ் பரிபாலன் ஆகியோர் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் திருப்பலி நடத்தினர்.

இதில், இலங்கை கடற்படையின் வைஸ் அட்மிரல் மனகோடா,வடக்கு கட்டளை தளபதி கேப்டன் லியங்கமேகி, இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரி சாய் முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்தியாவிலிருந்து சென்ற 3,741 பேர், இலங்கையிலிருந்து சென்ற 9 ஆயிரம் பேர் என 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நேற்று காலை பக்தர்களுக்கு இலங்கை கடற்படை சார்பில் உணவு வழங்கப்பட்டது. பின்னர், இந்தியாவிலிருந்து சென்ற பக்தர்கள் நேற்று மாலை ராமேசுவரம் திரும்பினர்.

விரைவில் பேச்சுவார்த்தை... இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் செய்தியாளர்களிடம் கூறும்போது, “கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது. இந்தியஇழுவைப்படகு மீனவர்கள் சிலர் சட்டவிரோதமாக செயல்படுவதால் கடல் வளம் அழிகிறது. இதனால், இந்தியா மற்றும் இலங்கை நாட்டுப்படகு மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்திய இழுவைப்படகு உரிமையாளர்கள் தயவு செய்து கடல் வளத்தை அழிக்கும் வேலையை செய்ய வேண்டாம்.

கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை அனுமதிக்க முடியாது. தமிழக அரசியல்வாதிகள் தேர்தல் நேரங்களில் கச்சத்தீவை அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர். இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா இந்தியா வந்திருந்தபோது, இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடியிடம் பேசியுள்ளார். மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்“ என்றார்.

## அரசு பள்ளிகளில் இன்று முதல் மாணவர் சேர்க்கை தொடக்கம்


சென்னை, மார்ச்.02–

தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை இன்று தொடங்குகிறது.

தமிழக பள்ளிக்கல்வித் துறையின்கீழ் 37,554 அரசுப் பள்ளிகள் செயல்படுகின்றன. இவற்றில் 52 லட்சம் மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். அரசுப் பள்ளிகளைப் பொருத்தவரை, கோடை விடுமுறை முடிந்து ஜூன் மாதம் பள்ளி திறக்கும் நாளில்தான் மாணவர் சேர்க்கை தொடங்குவது வழக்கமாக இருந்தது.

இந்தச் சூழலில், மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் விதமாக, கடந்த 2024ம் ஆண்டு முதல், மார்ச் மாதமே மாணவர் சேர்க்கை தொடங்கப்படுகிறது. இதற்கு பரவலாக பெற்றோரிடம் நல்ல வரவேற்பும் உள்ளது.

இந்த நிலையில், அரசுப் பள்ளிகளில் வரும் 2026 27 கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை இன்று



(மார்ச் 2) தொடங்க உள்ளது. அதற்கேற்பபள்ளிகளில் உரிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வியை நிறைவு செய்யும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை அருகே உள்ள அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

‘அனைத்து அரசுப் பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை விகிதம் கணிசமான அளவில் அதிகரிக்க வேண்டும். அதற்கேற்ப மாணவர் சேர்க்கைக்கான செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் எண்ணும் எழுத்தும், காலை உணவுத் திட்டம், ஸ்மார்ட் வகுப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள், உதவித் தொகைகள் குறித்து பெற்றோரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள வேண்டும்’ என்று அனைத்துப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை தரப்பில் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## “அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்” பழனிசாமி நம்பிக்கை

மதுரை, மார்ச்.02–

‘‘தேசிய ஜனநாயக கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்’’ என்று அதிமுக பொதுச்செயலாளர் கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மதுரை தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமி பேசியதாவது: திமுக கூட்டணியில் இன்னும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கவில்லை. ஆனால், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் பிரச்சாரத்தை தொடங்கி, இரண்டாவது பொதுக்கூட்டம் மதுரையில் நடைபெறுகிறது.

இந்திய நாடே தற்போது தமிழக சட்டப்பேரவை தேர்தலில் யார் வெற்றிப்பெற போகிறார்கள் என்று உற்றுநோக்கி பார்த்து வருகிறது. மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்கு பெற்ற கட்சிகள் இணைந்துள்ளன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர்.

எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்களவைத்தேர்தலில் வெற்றியை கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர். அதுபோல், வரும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியை அதிக தொகுதிகளில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்.

அதிமுகவை பொறுத்தவரையில் அது சாதி, மதத்திற்கு அப்பாற்பட்ட கட்சி. பல்வேறு சோதனைகளை கண்ட கட்சி. 31 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த கட்சி. பொன்விழா கண்ட கட்சி. தமிழகம் இந்தளவுக்கு வளர்ந்துள்ளதற்கு எங்கள் அதிமுக தலைவர்கள் தமிழகத்திற்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததே முக்கிய காரணம்.

பிரதமர் மோடி உலக நாடுகளே பொறாமைப்படும் அளவிற்கு இந்திய நாட்டை ஆட்சி



செய்கிறார். முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி மத்திய ஆட்சியர்கள், எந்த வளர்ச்சியும், நிதியையும் தமிழகத்திற்கு கொடுக்கவில்லை என்று அவதூறுகளை பரப்பி வருகிறார். இன்று இந்த மேடைக்கு வருவதற்கு முன் கூட அரசு விழாவில் தமிழகத்திற்கு ரூ.4,500 கோடி வளர்ச்சி திட்டங்களுக்கு கொடுத்து விட்டுதான் வந்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் தமிழகம் வரும்போது ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை தமிழகத்திற்கு பிரமர் மோடி வாரி வழங்கி வருகிறார். ஆனால், திமுக கூட்டணி கட்சியினர் செய்த சாதனைகளை சொல்வதற்கு எதுவும் இல்லாமல் மத்திய அரசு மீது திட்டமிட்டு அவதூறு செய்திகளை பரப்பி வெற்றிபெற பார்க்கிறார்கள்.

திமுகவுக்கு குடும்ப நலன் மட்டுமே அக்கட்சியின் நிலைபாடாக உள்ளது. காற்று கண்ணுக்கு தெரியாது. ஆனால், அந்த காற்றில் கூட ஊழல் செய்த ஒரே கட்சி திமுக. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர். திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்த கட்சி என்று சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி திமுக ஆட்சிதான். ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும். தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. 11 அரசு மருத்துவக்கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக்கல்லூரியைக் கூட பெற முடியவில்லை. பாம்பன் ரயில்வே பாலத்தை பிரதமர் கட்டி கொடுத்துள்ளார்.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோதுதான் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை மதுரைக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனைப் பணிகள் நடந்து வருகின்றன. அந்த மருத்துவமனையை வர விடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமானநிலையம் விரிவாக்கம் செய்வதற்கு அதிமுக ஆட்சியில் ‘அன்டர் பாஸ்’ முறையில் பல்வேறு முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது. ஐந்து ஆண்டு கால ஆட்சியில் மதுரை விமானநிலையம் விரிவாக்கத்திற்கு திமுக ஆட்சியில் எந்த முயற்சியும் நடக்கவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

## சென்னையில் மார்ச் 5 முதல் அரசு மருத்துவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம்

சென்னை, மார்ச்.02–

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354 மறு வரையறை, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு படிகள் ரூ.3 ஆயிரம், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மருத்துவ பணியிடங்கள் உள்ளிட்ட கோரிக் கைகளுக்காக அரசு மருத்துவர்கள் நீண்டகால மாக போராடி வருகின்றனர்.

இந்நிலையில், அடுத்தக் கட்டமாக வரும் 5ம் தேதி முதல் சென்னையில் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். இதுதொடர்பாக. அனைத்து அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பாலகிருஷ்ணன், ராமலிங்கம், அகிலன், சுந்தரேசன் ஆகியோர் கூறுகையில், வரும் 5ம் தேதி முதல் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுப்பது என கூட்டமைப்பின் செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டது என்றனர்.

## மாநிலங்களவை எம்.பி. பதவி அன்புமணிக்கு உறுதியானது

சென்னை, மார்ச்.0–

பாமகவில் ராமதாஸ், அன்புமணி இடையே நிலவி வரும் பிரச்சினையால் கட்சியினர் இரு பிரிவுகளாக செயல்பட்டு வருகின்றனர்.

கட்சியில் உள்ள 5 எம்எல்ஏக்களில் ஜி.கே.மணி, இரா.அருள் ராமதாஸுக்கு ஆதரவாக உள்ளனர். எஸ்.பி.வெங்கடேஸ்வரன், எஸ்.சதாசிவம், சி.சிவக்குமார் ஆகியோரும் கட்சி நிர்வாகிகளில் பெரும்பலானோரும் அன்புமணிக்கு ஆதரவாக உள்ளனர். கட்சியும், மாம்பழம் சின்னமும் தனது பக்கமே இருப்பதால், அதிமுக கூட்டணியில் அன்புமணி இணைந்தார்.

அதிமுக கூட்டணியில் 18 தொகுதிகள் அன்புமணிக்கு ஒதுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இதற்கிடையில், தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை எம்.பி.க்களுக்கான தேர்தல் மார்ச் 16ம் தேதி நடைபெறவுள்ளது. இதில், 2 எம்.பி.க்கள் அதிமுகவுக்கு கிடைக்கவுள்ள நிலையில், அதில் ஒரு எம்பி பதவியை அன்புமணிக்கு விட்டுக்கொடுக்க அதிமுக முன்வந்துள்ளது. அதற்கான, அதிகாரபூர்வ அறிவிப்பு ஓரிரு நாளில் வெளியாகவுள்ளது.

## “சிறிய வலி” பிரதமரிடம் மாநில அந்தஸ்து கோரிக்கையை வைத்த புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி

புதுச்சேரி, மார்ச்.02–

“தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதிகாரம் கிடைக்க புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து தேவை” என பிரதமர் மோடி பங்கேற்ற அரசு விழாவில் முதல்வர் ரங்கசாமி வலியுறுத்தினார்.

புதுச்சேரியில் பிரதமர் மோடி பங்கே கற்ற அரசு விழாவில் முதல்வர் ரங்கசாமி பேசியதாவது: தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி 5 ஆண்டு முடிவுற்ற நிலையில் எந்தெந்த திட்டங்களை கொண்டுவந்து, செயல்படுத்தியுள்ளது என்பது மக்களுக்கே தெரியும். இவை அனைத்தும் மத்திய அரசு, பிரதமர் மோடியின் உதவியால்தான் செய்ய முடிந்தது.

விவசாயிகள், ஆதிதிராவிடர் மக்களுக்கு அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளோம். சிறந்த கல்வி அளிக்க வேண்டும் என திட்டமிட்டு எங்கள் அரசு செயல்பட்டுள்ளது. சமூக பாதுகாப்புக்காக அனைத்து திட்டங்களையும் செயல்படு த்தியது தேசிய ஜனநாயக கூட்டணி. அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் முதியோர், மாற்றுத் திறனாளி, மீனவர் உதவித் தொகை, வீடு கட்டும் திட்டம் என அனைத்து திட்டத்தையும் நிறைவேற்றியுள்ளது தேசிய ஜனநாயக கூட்டணி.

பிரதமர் விரும்பியபடி பெஸ்ட் புதுவை என்ற நிலைக்கு அரசு கொண்டுவந்துள்ளது. மேலும் பல திட்டங்களை கொண்டுவந்து மாநிலத்தை வளர்ச்சிக்கு கொண்டு செல்ல பிரதமர் வந்துள்ளார். நாட்டிலேயே சிறந்த மாநிலமாக புதுவை பெயர் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்கள் வியந்து பாராட்டும் வகையில் புதுவை மாநிலம் வளர்ச்சி உள்ளது. இந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக பிரதமர் மோடி உள்ளார்.

திட்டங்களை நிறைவேற்றினாலும், எங்களிடம் சிறிய வலி, கோரிக்கை உண்டு. எங்களுக்கு மாநில அந்தஸ்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு தனி அதிகாரம் வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. புதுவை மக்கள் பல ஆண்டுகளாக மாநில அந்தஸ்து வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

சட்டசபையில் சுமார் 13 முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எந்த வளர்ச்சி பெற்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, அமைச்சர்கள், அமைச்சரவைக்கு அதிகாரம் வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கை. பிரதமர் இந்த கோரிக்கையை ஏற்று அதை செய்து கொடுப்பார்கள் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். என்று தெரிவித்தார். அவர் இக்கோரிக்கையை வைத்தபோது அரங்கில் கைத்தட்டல் அதிகளவில் எழுந்தது.

## “ஆட்சியை கவிழ்க்க ஈரான் மக்களே ஒன்றிணையுங்கள்” இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு

டெல் அவிவ், மார்ச்.02–

நாட்டின் தலைமைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து, ஆட்சியை கவிழ்க்கும் வெகுஜன போராட்டங்களில் ஈரான் மக்கள் இறங்க வேண்டுமென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

ஆபரேஷன் ரைசிங் லயன் மூலம் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் ராணுவத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு வெளியிட்ட வீடியோ செய்தியில், “ இஸ்ரேலின் தொடர்ச்சியான ராணுவ நடவடிக்கைகள் ஈரானின் ஆளும் அரசை பலவீனப் படுத்தி, அதிகார மாற்றத்தி ற்கான பாதையை அமைக் கும். வரவிருக்கும் நாட்களில், ஈரான் பயங்கரவாத ஆட்சியின் ஆயிரக் கணக்கான இலக்குகளை நாங்கள் தாக்குவோம். ஈரானின் துணிச்சலான மக்கள் கொடுங்கோன்மையின் சங்கிலிகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இது உதவும்.

ஈரானியர்களுக்கு தற்போதைய தருணம் ஒரு அரிய வரலாற்று வாய்ப்பு. இந்த நேரத்தில் ஈரான் மக்கள் செயலற்றவர்களாக இருக்க வேண்டாம். இது ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒரு முறை மட்டுமே வரும் ஒரு வாய்ப்பு. ஈரானியர்கள் தெருக்களில் இறங்கி ஆளும் அரசை வீழ்த்த ஒன்றுபட வேண்டும்.

பெர்சியர்கள், குர்துகள், அஜர்பைஜானியர்கள், அஹ்வாசிகள் மற்றும் பலுச்சிகள் உட்பட பல இன சமூகங்களும் ஈரானின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான கூட்டு முயற்சியில் ஈடுபட வேண்டும். ஈரான் மக்கள் தங்கள் தலைவிதியை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

## ஈரான் பதிலடி கொடுத்தால் விளைவுகள் மோசமாகும் ட்ரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச்.02–

ஈரான் கடும் தாக்குதலை நடத்துமானால் இதற்கு முன் பார்த்திராத ஒரு பெரும் சக்தியைக் கொண்டு நாங்கள் அவர்களைத் தாக்குவோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள ட்ரூத் சமூக ஊடக பதிவில், ‘‘இன்று ஈரான் மிகக் கடுமையாகத் தாக்கப் போவதாகவும், அது முந்தைய தாக்குதல்களைவிட மிகவும் வலிமையானதாக இருக்கும் என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது. அதை அவர்கள் செய்யாமல் இருப்பது நல்லது. ஒருவேளை அவர்கள் அவ்வாறு தாக்கினால், இதற்கு முன் பார்த்திராத ஒரு பெரும் சக்தியைக் கொண்டு நாங்கள் அவர்களைத் தாக்குவோம்’’ என்று தெரிவித்துள்ளார். முன்னதாக, அவர் வெளியிட்ட ஒரு சமூக ஊடக பதிவில் ஈரானின் மத தலைவரான அயோதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதாக அறிவித்தார். அவர் தனது பதிவில், “வரலாற்றின் மிக





மோசமான மனிதர்களில் ஒருவரான கமேனி இன்று இறந்துவிட்டார். இது ஈரானிய மக்களுக்குக் கிடைத்த நீதி மட்டுமல்ல, கமேனியாலும் அவரது ரத்தவெறி பிடித்த குண்டர் கும்பலாலும் கொல்லப்பட்ட அல்லது சிதைக்க ப்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும், சிறந்த அமெரிக்கர்களுக்கும் கிடைத்த நீதியாகும்.

எங்களுடைய உளவுத் துறை மற்றும் அதிநவீன கண்காணிப்பு அமைப்புகளிடமிருந்து அவரால் தப்பிக்க முடியவில்லை. இஸ்ரேலுடன் இணைந்து நாங்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையில், அவரோ அல்லது அவருடன் சேர்ந்து கொல்லப்பட்ட மற்ற தலைவர்களோ தற்காத்துக் கொள்ள எதுவுமே செய்ய முடியவில்லை. ஈரானிய மக்கள் தங்கள் நாட்டை மீட்டெடுப்பதற்கான ஒற்றைப் பெரும் வாய்ப்பு இதுவாகும்.

ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப் படை, ராணுவம் மற்றும் பிற பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பலர் இனிப் போரிட விரும்பவில்லை என்றும், எங்களிடமிருந்து பாதுகாப்பை எதிர்பார்ப்பதாகவும் எங்களுக்குத் தகவல்கள் வருகின்றன. நான் ஏற்கெனவே சொன்னது போல, இப்போது சரணடைந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு, காலம் கடந்தால் அவர்களுக்கு மரணம் மட்டுமே மிஞ்சும்! ஈரானிய புரட்சிகர பாதுகா ப்புப் படையும் காவல்துறையும் அமைதியான முறையில் ஈரான் தேசப்பற்றாளர்களுடன் இணைந்து, இந்த நாடு தகுதியுள்ள அந்தப் பெருமையை மீண்டும் அடைய ஒரு பிரிவாகச் செயல்படும் என்று நம்புகிறேன். கமேனியின் மரணம் மட்டுமல்லாமல், ஒரே நாளில் அந்த நாடு பெருமளவில் அழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டுள்ள நிலையில், இந்த மாற்றம் விரைவில் தொடங்கும்.

எவ்வாறாயினும், மத்திய கிழக்கு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டும் எங்களது இலக்கை அடையும் வரை, இந்தத் தீவிரமான மற்றும் துல்லியமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இந்த வாரம் முழுவதும் தடையின்றித் தொடரும்” என்று தெரிவித்திருந்தார். இதனிடையே, ஈரானின் ராணுவத் தளபதியும், பாதுக ாப்பு அமைச்சரும் கொல்லப் பட்டதை ஈரானின் அரசு தொலைக்காட்சி உறுதிப்படுத்தி உள்ளது. ராணுவத் தளபதி ஜெனரல் அப்தோல் ரஹீம் மவுசவி, பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அஜீஸ் நசீர்சாதே ஆகியோர் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பங்கேற் றபோது கொல்லப்பட் டதாக இன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயோதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதை அடுத்து அந்த நாட்டில் பதற்றம் அதிகரித்துள்ளது. ஏராளமான மக்கள் பொது இடங்களில் ஒன்றுகூடி தங்கள் எதிர்ப்பை, சோகத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். ஈரானுக்கு வெளியேயும் பல நாடுகளில் ஷியா பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், அயோதுல்லா அலி கமேனியின் மறைவுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அயோதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதை அடுத்து, ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (மிஸிநிசி), மத்திய கிழக்கு முழுவதும் உள்ள முக்கிய அமெரிக்க ராணுவ மையங்களைக் குறிவைத்து தாக்குதலை தொடங்கியுள்ளது. “ஆபரேஷன் ட்ரூத்ஃபுல் ப்ராமிஸ் 4” என பெயரிடப்பட்டுள்ள இந்த தாக்குதலில், ஆறு மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஏழு அமெரிக்க ராணுவ தளங்கள் குறிவைக்கப்பட்டுள்ளன.

## மண்டைக்காடு கோயில் மாசிக்கொடை திருக்கொடியேற்றத்துடன் தொடங்கியது: திரளான பக்தர்கள் பங்கேற்பு

நாகர்கோவில், மார்ச்.02–

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்திப்பெற்ற கோயில்களில் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலும் ஒன்று. கேரள பெண் பக்தர்கள் இருமுடிக்கட்டி இங்கு வந்து அம்மனை வழிபடுவதால் பெண்களின் சபரிமலை என்று அழைக்கப்படுகிறது. இங்கு ஆண்டுதோறும் மாசிக்கொடை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். இந்த விழாவின் போது கேரள, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர். இந்த ஆண்டின் மாசிக்கொடை விழா இன்று காலை திருக்கொடியேற்றத்துடன் துவங்கியது. விழா 10ம் தேதி வரை 10 நாட்கள் நடக்கிறது. இதையொட்டி காலை 4.30 மணிக்கு திருநடை திறக்கப்பட்டது. 5 மணிக்கு பஞ்சாபிஷேகம், 6 மணிக்கு தீபாராதனை, 8.9 மணியளவில் திருக்கொடி யேற்றம் ஆகியவை நடந்தது.

கோயில் தந்திரி சங்கரநாராயண ஐயர் திருக்கொடி வைத்தார். இதில் மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி விக்டோரியா கௌரி உள்பட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அதைத்தொடர்ந்து மாநாடு திடலில் இந்து சேவா சங்க 89 வது சமய மாநாடு கொடியேற்று நடந்தது. இதில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நண்பகல் 12 மணியளவில் கருமண்கூடல் கே.எஸ்.வி. பவனிலிருந்து மண்டைக்காடு அம்மனுக்கு சீர் கொண்டு வரப்பட்டது. மதியம் 1 மணிக்கு உச்சபூஜை, தொடர்ந்து அன்னதானம் நடந்தது. மாலை தங்கத்தேர் பவனி மற்றும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பூஜையும், 9000 திருவிளக்கு பூஜையும் நடக்கிறது.



## “இலவச கண் சிகிச்சை முகாம்: பாலமேட்டில் 202 பேருக்குப் பரிசோதனை 38 பேர் கண்ணாடி பெற்றுப் பயன்”

அலங்காநல்லூர், மார்ச்.02-

மதுரை மாவட்டம் பாலமேட்டில், தானம் அறக்கட்டளை (மதுரை கிராமப்புற மண்டல பாலமேடு வட்டார களஞ்சியம்) மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் பாலமேடு நாயுடு மகாலில் நடைபெற்றது.

இம்முகாமில் மொத்தம் 202 பேருக்கு விரிவான கண் பரிசோதனைகள் செய்யப்பட்டன. இதில் 42 பேர் கண் அறுவை சிகிச்சைக்குத் தகுதி பெற்றனர். 17 பேர் மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டனர்.

38 பேர் கண் கண்ணாடிகளைப் பெற்றுப் பயனடைந்தனர்.

அரவிந்த் கண் மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் பொதுமக்களுக்குப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். முகாமிற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் முருகேசன் மற்றும் மதுரை கிராமப்புற மண்டல சுகாதார ஒருங்கிணைப்பாளர் முத்தையா ஆகியோரின் வழிகாட்டலின்படி, பாலமேடு வட்டார களஞ்சிய ஒருங்கிணைப்பாளர் பாலமுருகன், நாகரத்தினம், சுகாதார ஒருங்கிணைப்பாளர் வினோதினி, பணியாளர்கள் மற்றும் களஞ்சிய நிர்வாக உறுப்பினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.



## சுத்தம்... சுகாதாரம்... பசுமை! எஸ்.ஆர்.எஸ். வேளாண் கல்லூரி மாணவர்களின் விழிப்புணர்வுப் பேரணி

திண்டுக்கல், மார்ச்.02-

சமூகப் பொறுப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி, எஸ்.ஆர்.எஸ். வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் சார்பில் அருகிலுள்ள பள்ளியில் எழுச்சிமிகு விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

பசுமை மற்றும் சுகாதார முழக்கங்கள்:

இந்தத் தன்னார்வ முயற்சியில் கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பெரும் திரளாகப் பங்கேற்றனர். பேரணியின் போது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பிளாஸ்டிக் ஒழிப்பு, தனிநபர் சுத்தம் மற்றும் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர். மாணவர்கள் எழுப்பிய சமூக விழிப்புணர்வு கோஷங்கள் அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் மாணவிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாணவர்களின் முயற்சியை பாராட்டினர். இந்த பேரணி மூலம் சமூக பொறுப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் என்பதை எடுத்துரைக்கப்பட்டது.



## தேவையற்ற உரச்செலவுக்கு முற்றுப்புள்ளி! நெல் சாகுபடியில் லாபம் ஈட்ட வேளாண் மாணவரின் எளிய தொழில்நுட்பம்

திண்டுக்கல், மார்ச்.02-

திண்டுக்கல் மாவட்டம், மங்கரை கிராமத்தில் விவசாயிகளின் உரச் செலவைக் குறைத்து மகசூலை அதிகரிக்கும் நோக்கில், இலை நிற அட்டவணை (Leaf Colour Chart - LCC) பயன்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

வேளாண் மாணவரின் வழிகாட்டல்:

மதுரை வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவன் கோமல்.அ அவர்கள், தனது ஊரகப் புலப்பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பயிற்சியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

பயிற்சியின் சிறப்பம்சங்கள்:

பயிற்சியின் போது, நெல் உள்ளிட்ட தானியப் பயிர்களுக்கு நைட்ரஜன் (யுரியா) உரம் இடுவதில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நவீன முறைகள் குறித்து விளக்கப்பட்டது.

* சரியான கணக்கீடு : இலை நிற அட்டவணையைப் பயன்படுத்தி பயிரின் நைட்ரஜன் தேவையைத் துல்லியமாகக் கணிப்பது எப்படி?

செலவு குறைப்பு: தேவையற்ற மற்றும் அளவுக்கு அதிகமான உரங்களைத் தவிர்ப்பதன் மூலம் சாகுபடி செலவைக் குறைக்கும் வழிமுறைகள்.

நடைமுறை விளக்கம்: எத்தனை நாட்களுக்கு ஒருமுறை இலைகளை அட்டவணையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், எப்போது மேலதிக உரம் இட வேண்டும் என்பது குறித்து மாணவர் கோமல் நேரடி விளக்கம் அளித்தார்.

விவசாயிகள் பாராட்டு:

இப்பயிற்சியில் கலந்து கொண்ட மங்கரை கிராம விவசாயிகள், “அறிவியல் அடிப்படையிலான இந்த எளிய முறை எங்களின் உரச்செலவை வெகுவாகக் குறைக்கும்“ என்று நெகிழ்ச் சியுடன் தெரிவித்தனர். கிராமப்புற மேம்பா ட்டிற்காக மாணவர் களின் இத்தகைய நேரடிப் பயிற்சிகள் மிகவும் பயனுள் ளதாக இருப்பதாகப் பாராட்டுகள் குவிந்தன.





## வருங்கால விஞ்ஞானிகளின் சங்கமம்: ஸ்ரீ சைதன்யா பள்ளியில் தேசிய அறிவியல் தினக் கொண்டாட்டம்

திருப்பூர், மார்ச்.02-

திருப்பூர் காலேஜ் ரோடு பகுதியில் இயங்கி வரும் ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளியில், தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு பிரம்மாண்ட அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. ஆண்டுதோறும் பிப்ரவரி 28ம் தேதி கொண்டாடப்படும் இவ்விழாவையொட்டி, இந்த ஆண்டு பள்ளி வளாகத்தில் மாணவர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

சிறப்பு விருந்தினர்கள் வருகை

இந்தக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து மாணவர்களை ஊக்கப்படுத்த, அமித் குமார் பிரசாத் (இயக்குனர், Petexx India Exports), மகா ஸ்வேதா (அறிவியல் கல்வியாளர், Mango Education), பைசல் (வாழ்க்கைத் திறன் பயிற்சியாளர், Naandhi Academy) சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்:

பல்வேறு துறைகளில் மாணவர் படைப்புக:

பள்ளியின் அனைத்து மாணவ, மாணவியரும் மிகுந்த ஆர்வத்துடன் இக்கண்காட்சியில் பங்கேற்றனர். குறிப்பாக, இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் சார்ந்த செயல்முறை விளக்கங்கள், கணிதம் மற்றும் சமூகவியல் மாதிரிகள், நவீன காலத்தின் தேவையாக விளங்கும் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள். வண்ணம யமாக அமைக்கப்பட்டிருந்த அரங்குகளைப் பெற்றோர்களும் பொதுமக்களும் நேரில் கண்டு மாண வர்களின் தனித்திறமைகளை வெகுவாகப் பாராட்டினர்.

நிர்வாகத்தின் வாழ்த்துகள்:

சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும் என்று பள்ளியின் முதல்வர் நிலாபர் நிஷா தெரிவித்தார். இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக ஒருங்கிணைத்த பள்ளி நிறுவனர் டாக்டர் ஜான்சிலட்சுமிபாய், இயக்குனர்கள் சீமா போப் பண்ணா மற்றும் நாகேந்திரா, தமிழ்நாடு செயல்பாட்டுத் தலைவர் ஹரிபாபு, துணை பொறுப்பாளர் நாகேஸ்வர ராவ், மண்டல பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர் மாணவர்களுக்குத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.












## வீடு வீடாகச் செல்லுங்கள்... மக்கள் குறைகளை என்னிடம் சொல்லுங்கள்! ஆத்தூர் திமுக மகளிர் படைக்கு அமைச்சர் கொடுத்த அசைன்மென்ட்

சின்னாளபட்டி, மார்ச்.02-

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில், திமுக மகளிர் அணி சார்பில் நடைபெற்று வரும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ பிரச்சாரக் குழுவினர், சிங்கம்போலப் புறப்பட்டு மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தி வருவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி புகழாரம் சூட்டியுள்ளார்.

உறவு சொல்லி உரிமை யோடு பிரச்சாரம்:

ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட 46 கிராம ஊராட்சிகள் மற்றும் 7 பேரூராட்சிகளில் இப்பிரச்சாரக் குழுவினர் தீவிர களப்பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அக்கா, மதினி, பெரியம்மா, சித்தி எனப் பாசத்தோடு உறவுமுறை சொல்லி அழைத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி வருகின்றனர். குறிப்பாக, மகளிருக்கான விடியல் பயணம்,

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமை ப்பெண் திட்டம் மற்றும் காலைச் சிற்றுண்டித் திட்டம்,

மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் தாயுமானவர் திட்டம் போன்ற மக்கள் நலத்திட்டங்களை எடுத்துரைப்பதோடு, “ஸ்டாலின் தொடரட்டும் தமிழகம் வெல்லட்டும்“ என்ற ஸ்டிக்கர்களையும் வீடுகளில் ஒட்டி வருகின்றனர்.

அமைச்சரின் முக்கிய வேண்டுகோள்:

இந்த எழுச்சிமிகு பிரச்சாரத்தைப் பாராட்டிய அமைச்சர் ஐ.பெரியசாமி, ஒரு முக்கிய வேண்டுகோளையும் விடுத்துள்ளார். “வீடு தவறாமல் பிரச்சாரம் செய்யும் வெல்லும் தமிழ் பெண்கள், அப்பகுதி மக்கள் தெரிவிக்கும் குறைகளையும் கனிவோடு கேட்டறிந்து குறிப்பெடுக்க வேண்டும். அந்தப் புகார்களை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தால், மக்கள் குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும்“ என அவர் உறுதி அளித்துள்ளார்.

பொதுவாக இளைஞர்களும் கட்சி நிர்வாகிகளுமே முன்னின்று நடத்தும் பிரச்சாரங்களுக்கு மத்தியில், இந்த முறை பெண்களின் இந்தத் தீவிரப் பணி பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மே மாதம் பட்டினி... கௌரவ விரிவுரையாளர்களுக்கு அமைச்சர் கோவி.செழியன் கொடுத்த ‘அல்வா’!

தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள், கௌரவ விரிவுரை யாளர் களுக்கு ஒரு ‘தித்திப்பான’ மெகா அல்வாவை கிண்டிக் கொடுத்துள்ளார். 20 ஆண்டுகால உழைப்பிற்குப் பணிப் பாதுகாப்பை வழங்காமல், வெறும் வார்த்தை ஜாலங்களால் காலத்தைக் கடத்தி வரும் அமைச்சரின் செயல் தற்போது அம்பலமாகி யுள்ளது.

கடந்த பிப்ரவரி மாதம் 10 சங்கங்கள் இணைந்து JACGLA நடத்திய போராட்டத்தின் வீரியத்தைக் கண்டு அஞ்சிய அமைச்சர், மூடிய அறைக்குள் 5 முக்கிய கோரிக்கைகளை ஏற்பதாக ‘அல்வா’ கொடுத்துவிட்டு, இப்போது வாய் மூடி



மௌனியாக இருக்கிறார்.

தமிழகத்தின் வருங்காலத் தூண்களை உருவாக்கும் இந்த விரிவுரை யாளர்க ளுக்கு மே மாதம் ஒரு பைசா கூட ஊதியம் வழங்கப்படுவதில்லை. வருடம் முழுவதும் மாடாக உழைத்து விட்டு, மே மாதம் தன் குழந்தைகளுக்கு ஒரு வேளை உணவளி க்கக்கூட வழியின்றி இந்த ஆசிரியர்கள் தவிக்கிறார்கள்.

ஆசிரியர்களைப் பட்டினி போட்டுவிட்டு, உயர்கல்வியில் முதலிடம் என்று தம்பட்டம் அடிக்க அமைச்சருக்கு எப்படி மனசாட்சி இடம்கொடுக்கிறது?

“எங்கள் உழைப்பைச் சுரண்டிவிட்டு, மே மாதம் எங்களைப் பட்டினி போடும் அரசின் இந்த நவீனத் தீண்டாமையை ஒழிக்காமல் விடமாட்டோம். அமைச்சர் கோவி. செழியன் அவர்களே... உங்கள் அல்வா அரசியலைத் தூக்கியெறி ந்துவிட்டு, பணி நிரந்தரம் குறித்த அரசாணையை வெளியிடுங்கள். இல்லையென்றால் தமிழக உயர்கல்வித் துறை ஸ்தம்பிக்கும்!” எனச் கௌரவ விரிவுரையாளர் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.



## பெட்டைகுளத்தில் முதல்வர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா: பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

திசையன்விளை,| மார்ச்.02-

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, திருநெல்வேலி கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி சார்பில் திசையன்விளை அருகிலுள்ள பெட்டைகுளத்தில் உற்சாகமான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. விழாவிற்கு, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளரும் (றிலிகி2), ஒன்றிய பிரதிநிதியுமான எம். ஞானராஜ் தலைமை தாங்கி ஏற்பாடுகளைச் செய்திருந்தார். விழாவில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. “திமுக ஆட்சி தொடர வேண்டும்“ எனப் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

நிகழ்வில் முன்னாள் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பிரகாசம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நாராயணன், கிளை கழக செயலாலர்கள் பெட்டைகுளம் சேவியர், தாஜூதின், வடக்கு பெட்டைகுளம் ஜாவாகிர், ஒன்றிய பிரதிநிதி புலிகுளம் கார்த்திக், பாக்கியம் கிளை செயற்குழு உறுப்பினர்கள் ஜெபமணி, முத்துராஜ், பேதுரு மற்றும் கழக நிர்வாகிகள்பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000